# தமிழ்நாடு உள்ளாட்சி அமைப்புகள் முறைமன்ற நடுவம்

எண்.100 அண்ணா சாலை, கிண்டி, சென்னை–600 032.
தொலைபேசி: 044–22201337
மின்னஞ்சல் முகவரி: ombudsmanlocal@tn.gov.in

**தமிழ்நாடு உள்ளாட்சி அமைப்புகள் முறைமன்ற நடுவர், சென்னை–600 032**
**முன்னிலை: முனைவர் சோ. அய்யர், இ.ஆ.ப., (ஓ),**

முறையீட்டு மனு எண்: 1172/ஊராட்சி/2018

நாள்: 03/9/2018

திருமதி. R சுசிலா,
7/2, மாருதி நகர், 6வது குறுக்கு தெரு,
கழிஞ்சூர், காட்பாடி,
வேலூர் – 6. – **மனுதாரர்**

வட்டார வளர்ச்சி அலுவலர்,
சோளிங்கர் பஞ்சாயத்து யூனியன்,
சோளிங்கர் மற்றும் பலர். – **எதிர் மனுதாரர்கள்**

## <u>ஆணை</u>

வேலூர் மாவட்டம், காட்பாடி தாலுக்கா, க.எண்.7/2, மாருதி நகர், 6-வது குறுக்கு தெருவில் வசித்து வரும், திருமதி. ஆர். சுசிலா, அவருடைய 14.8.2018 நாளிட்ட மனுவில், அவருடைய தகப்பனார் திரு. ஆஞ்சநேயன், கொக்கேரி கிராமத்தில் சர்வே எண்.42/3Bல் 38.5 ஏர் (சுமார் 1 ஏக்கர்) நிலத்தை மனுதாரர் பெயருக்கு செட்டில்மெண்ட் பத்திரம் எழுதி பதிவு செய்யப்பட்டுள்ளது. (2011ஆம் ஆண்டு ஆவண எண்.8454-ன்படி) என்றும் இந்த நிலத்தில் 3 ஏர் (7 செண்ட்) இடத்தில் மட்டும் இராணுவத்தில் பணிபுரிந்து கொண்டிருக்கும் திரு. முரளி த/பெ. (லேட்) கங்காதரன் என்பவர், அவருடைய பெயரில் வீடு கட்ட வரைபட ஒப்புதல் பெற்று வீட்டு வரி மற்றும் குடிநீர் குழாய் இணைப்பும் பெற்றுள்ளார் என்று தெரிவித்து அவருடைய நிலத்தினை திரு. முரளி அவர்களிடமிருந்து மீட்டுத் தரக் கோரியுள்ளார்.

2. 2014–ஆம் ஆண்டு தமிழ்நாடு உள்ளாட்சி அமைப்புகள் முறைமன்ற நடுவர் சட்டம், பிரிவு 2, உட்பிரிவு (7)ன்படி "உள்ளாட்சி அமைப்பு" என்பதற்கான பொருளில் "ஊராட்சி மன்றம்" மற்றும் "ஊராட்சி ஒன்றியம்" என்ற அமைப்புகள் வரையறுக்கப்படவில்லை. எனவே, மனுதாரரின் மனு மீது இம்முறைமன்ற நடுவத்தால் எவ்வித நடவடிக்கையும் மேற்கொள்ள வழிவகையில்லை. எனவே, இம்மனுவினை மாவட்ட ஆட்சித் தலைவர், வேலூர் அவர்களுக்கு தக்க நடவடிக்கைக்காக அனுப்பலாம் என முடிவு செய்து, அவ்வாறே அனுப்பப்படுகின்றது. மேலும் இப்பொருள் குறித்து, வேலூர் மாவட்ட ஆட்சித் தலைவர் அவர்களை அணுகுமாறு மனுதாரருக்கு அறிவுறுத்தி ஆணையிடப்படுகிறது.

2018-ஆம் ஆண்டு செப்டம்பர் திங்கள் 3-ஆம் நாளன்று, என்னால் கையொப்பமிடப்பட்டு, அலுவலக முத்திரையிட்டு இவ்வாணையிடப்படுகிறது.

--//ஒப்பம்//--
தமிழ்நாடு உள்ளாட்சி அமைப்புகள் முறைமன்ற நடுவர்

/ஆணைப்படி அனுப்பப்படுகிறது/

5/9/2018
செயலாளர்.

<u>பெறுநர்</u>

திருமதி. R சுசிலா,
7/2, மாருதி நகர், 6வது குறுக்கு தெரு,
கழஞ்சூர், காட்பாடி,
வேலூர் – 6.

<u>நகல்</u>

1. மாவட்ட ஆட்சியர்,
   மாவட்ட ஆட்சியர் அலுவலகம்,
   வேலூர் மாவட்டம்,
   வேலூர். (இணைப்புகளுடன்)
2. முறைமன்ற நடுவர் அவர்களின் நேர்முக எழுத்தர்
3. ஊராட்சிகளின் உதவி பிரிவு அலுவலர்.